LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka.

**Eastern University, Sri Lanka**

**Faculty of Commerce and Management**

**External Degree**

**Part III Examination in Business Administration/ Commerce 2001 / 2002**

**(April / May 2008) (Repeat)**

**BBA/COM 406 Research Methodology**

**சகல வினாக்களுக்கும் விடை தருக.** **நேரம் : 02 மணித்தியாலங்கள்**

---

## பகுதி – I

1. இலங்கையில் வங்கி ஒன்றினால் வெளியீடு செய்யப்படும் தேசிய சஞ்சிகை யாது? அதனை வெளியிடும் வங்கி எது?

2. இலங்கையில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு செய்யக்கூடிய இரு முக்கிய ஆய்வுப் பிரச்சினைகளை சுருக்கமாகக் குறிப்பிடுக.

3. பின்வரும் பதங்களால் நீங்கள் விளங்குவது என்ன?
   a. நல்லாட்சி
   b. கூட்டாண்மை சமூகப் பொறுப்பு
   c. திண்மக் கழிவு
   d. நுண்நிதி

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் இரண்டு அபிவிருத்தித் திட்டங்களை சுருக்கமாக விளக்குக.

5. இலங்கையில் நீண்டகாலமாகத் தொழிற்பட்டுவரும் இரண்டு அரசசார்பற்ற நிறுவனங்களைப்பற்றி சுருக்கமாக விளக்குக.

6. ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதய செயளாளர் நாயகம் யார்?

7. 2006/2007ம் ஆண்டில் இலங்கையின் மிகச் சிறந்த கம்பனியாகத் திகழ்ந்த நிறுவனம் எது? அதனைப் பற்றிச் சுருக்கமாக குறிப்பிடுக.

8. அண்மையில் மியன்மாரைத் தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?

9. "கமநெகும" என்னும் பதத்தால் நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன?

10. பின்வரும் குறுக்கங்களை விரிவாக்குக.

    (i) addidas (ii) CLI (iii) CDMA (iv) ISO (v) GTZ

**(3 x 10 = 30 புள்ளிகள்)**

## பகுதி – II

1. “ஆய்வு” என்பதனை வரைவிலக்கணம் செய்க.

2. “ஆய்வுப் பிரச்சினை” என்றால் என்ன? உதாரணங்கள் தருக.

3. ஆய்வு ஒன்றுக்கான நூலாய்வினை மேற்கொள்வதற்கு எவ்வாறு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்?

4. “அளவீட்டு அலகு” எனும் அடிப்படையில் ஆய்வு மாறிகளை எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்?

5. “மாறிகளை எண்ணக்கருவாக்கம் செய்தல்” என்பதால் நீங்கள் விளங்கிக்கொள்வதென்ன?

6. ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும் போது தரவுகள் சேகரிக்கப்படும் முறைகள் யாவை?

7. “கட்டமைக்கப்பட்ட நேர்காணல்” மூலம் தரவுகள் சேகரிக்கும் முறையின் அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் ஆராய்க.

8. மாதிரி எடுத்தல் நுட்ப முறைகளைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

9. ஆய்வு அறிக்கை ஒன்றில் தரவுகள் முன்வைக்கப்படும் முறைகளைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

10. இருமாறிப் பகுப்பாய்வு முறையினை பற்றி சுருக்கமாக விளக்குக.

**(4 x 10 = 40 புள்ளிகள்)**

LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka.

## பகுதி – III

கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு ஒன்றின்படி கடந்த சில ஆண்டுகளாக மாணவர் இடைவிலகல் வீதம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் அதிகரித்துச் செல்வதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது எனக் கருதுக. அத்துடன் இப் பிரச்சினைக்கான காரணங்கள் யாவை என ஆய்வு ஒன்றை நடாத்தி கண்டறியுமாறும் அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை சிபாரிசு செய்யுமாறும் நீங்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் கருதுக.

**வேண்டப்படுவது :**

1. ஆய்வுக்கான ஆய்வுப் பிரச்சினையையும் ஆய்வு வினாக்களையும் நிறுவுக.

2. ஆய்வுக்கான குறிக்கோள்களை வடிவமைக்குக.

3. மாறிகளை அடையாளங் கண்டு எண்ணக் கருவாக்க மாதிரியை வரைக.

4. மாறிகள், பரிமாணங்கள், குறிகாட்டிகள், மதிப்பீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியவாறு நடைமுறையாக அட்டவணை ஒன்றைத் தயாரிக்கக.

5. ஆய்வுக்கான பொருத்தமான ஆய்வு முறையினை (தரவு சேகரிப்பு முறை, மாதிரி அளவு, மாதிரிப் பரம்பல், மாதிரி எடுப்பு முறை, தரவு பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டு முறை) குறிப்பிடுக.

6. ஆய்வுக்கான வரையறைகளைக் குறிப்பிடுக.

**(5 x 6 = 30 புள்ளிகள்)**